கோவை முப்பெரும் விழா நமக்கு ஊக்கமளிக்கும்

2026 சட்டமன்ற தேர்தல் களத்திற்கு இப்போதே ஆயத்தமாக வேண்டும்

தொண்டர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூன்.13– 2026 சட்டமன்ற தேர்தல் களத்திற்கு இப்போதே ஆயத்தமாக வேண்டும் என்றும், அதற்கு முப்பெரும் விழா ஊக்கமளிக்கும் என்றும் தொண்டர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

முப்பெரும் விழா அழைப்பு கடிதத்தை எழுதுகிறேன். செப்டம்பர் மாதத்தில் தானே முப்பெரும் விழா நடைபெறும் என்று கருணாநிதியின் தொண்டர்களாகிய நீங்கள் கேட்பது உங்களில் ஒருவனான எனக்கும் கேட்கிறது. தந்தை பெரியார், அண்ணா பிறந்த நாள், தி.மு.க. உருவான நாள் ஆகியவற்றைக் கொண்டாடும் திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தில் முப்பெரும் விழாவை நடத்துவோம். அந்த முப்பெரும் விழாவுக்கு முன்பாக, ஒரு முன்னோட்ட விழாவாக வரும் 15ந்தேதி கோவை கொடீசியா அரங்கில் இந்த முப்பெரும் விழா நடைபெறவிருக்கிறது. இது தி.மு.க. மட்டுமான விழாவோ; அதன் தோழமைக் கட்சிகளுக்கான விழாவோ மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களின் விழா.

அவர்கள் நமக்கு வழங்கியுள்ள மகத்தான வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் விழா. மதவாத அரசியலுக்குக் கடிவாளம் போட்டு ஜனநாயகத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் பாதுகாத்து, நாட்டை வழிநடத்தும் வகையில் நாற்பதுக்கு நாற்பதை நமக்கு வழங்கியிருக்கிறார்கள் தமிழ்நாட்டு மக்கள். அந்த வெற்றியையும், அத்தகைய வெற்றிப்பாதையில் பயணிக்க எந்நாளும் நம்மை இயக்குகின்ற ஆற்றலாக விளங்கும் கருணாநிதி நூற்றாண்டு நிறைவு விழாவையும், 40/40 என்கிற மகத்தான வெற்றிக்கூட்டணிக்குத் தலைமையேற்கும் பொறுப்பேற்ற உங்களில் ஒருவனான எனக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையிலும் கோவையில் முப்பெரும் விழா நடைபெறும் என பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்திருக்கிறார். கட்டளை கேட்டதும் பாய்கின்ற கணை போல, அறிவிப்பு வெளியானதுமே கட்சி நிர்வாகிகள் விழா ஏற்பாடுகளைத் தொடங்கி விட்டார்கள். தேர்தல் முடிவுகள் வெளியான நாளில் அண்ணா அறிவாலயத்தில் ஊடகத்தினருடனான சந்திப்பின்போது அவர்கள் என்னிடம், ''நாற்பதுக்கு நாற்பது என்ற முழுமையான வெற்றியை நாங்களே எதிர்பார்க்கவில்லை'' என்றனர். ''நான் எதிர்பார்த்திருந்தேன்'' என்று அவர்களிடம் தெரிவித்தேன்.

தொண்டர்களின் உழைப்பை பாராட்டும் கோவை விழா

உறுதியாக நான் எதிர்பார்த்ததற்குக் காரணம், தொண்டர்களாகிய நீங்கள் நிச்சயம் இந்த முழுமையான வெற்றியைப் பெற்றுத்தருவீர்கள் என்ற நம்பிக்கையினால்தான். அதற்கேற்ற உழைப்பை வழங்கிய தொண்டர்களின் ஒவ்வொருவருக்குமான பாராட்டை உங்களில் ஒருவன் என்ற முறையில் நான் ஏற்றுக்கொள்ளும் விழாதான் கோவை முப்பெரும்விழா. இது தொண்டர்களின் உழைப்பைப் பாராட்டுகின்ற விழா.

இந்தியா கூட்டணியின் அடுத்தடுத்த நகர்வுகள் தான் இனி நாட்டின் வருங்காலத் திசை வழியைத் தீர்மானிக்கும். கோவையில் நம் தோழமைக் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெறவுள்ள முப்பெரும் விழா என்பது மாபெரும் ஜனநாயகக் கொண்டாட்டமாக அமைய விருக்கிறது. மேற்கு மண்டலம் தங்களின் பட்டா நிலம் என்பது போல நினைத்துக்கொண்டு அங்குள்ள மக்களை வஞ்சித்து அரசியல் லாபம் தேடிய கட்சிகளின் உண்மையான நிலை என்ன என்பதை தி.மு.க.வுக்கும் அதன் கூட்டணிக்கும் அளித்துள்ள வெற்றியின் வாயிலாக மேற்கு மண்டல மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். அதனால்தான் கோவையில் முப்பெரும் விழா நடைபெறுகிறது.

தி.மு.க. மாநாடுகள், பொதுக்கூட்டங்கள், வெற்றி விழாக்கள் எதுவாக இருந்தாலும் அது வெறும் கூடிக்கலைவதற்கான நிகழ்வல்ல. ஒவ்வொரு நிகழ்வும் தொண்டர்களுக்கான பயிற்சி அரங்கம். அடுத்த களத்திற்கான ஆயத்தப் பணி. கோவை முப்பெரும் விழாவைத் தொடர்ந்து விக்கிரவாண்டி தொகுதியின் இடைத்தேர்தலை எதிர்கொள்ளவிருக்கிறோம். அங்கும் நம் தொடர் வெற்றியினை உறுதி செய்தாக வேண்டும். அதனைத் தொடர்ந்து, ஊரக உள்ளாட்சித் தேர்தல் களம் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, 2026 சட்டமன்றத் தேர்தல் களத்திற்கும் நாம் இப்போதே ஆயத்தமாக வேண்டும்.

தமிழ்நாட்டின் 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 234 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி 221 தொகுதிகளில் முன்னிலை பெற்றிருக்கிறது. இதுதான் தமிழ்நாட்டு மக்கள் நமக்கு வழங்கியுள்ள நற்சான்றிதழ்.

மூன்றாண்டு கால திராவிட மாடல் அரசின் திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் நேரடிப் பயன்களைத் தந்திருப்பதால் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நாம் இருக்கிறோம். அந்த நம்பிக்கை மேலும் வலுப்பெறும் வகையில் திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் தொடரும். அவை சரியான முறையில் மக்களிடம் சென்று சேர்வதையும் அதன் நீண்டகாலப் பயன்களையும் எடுத்துரைக்கக்கூடிய வர்களாக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்படவேண்டும்.

நாற்பதுக்கு நாற்பது என்று நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றது போல, 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றியினை உறுதி செய்திட வரும் 15ந்தேதி கோவை முப்பெரும் விழா நமக்கு ஊக்கமளிக்கும் இடமாக அமையட்டும். காணப்போகும் களங்கள் அனைத்திலும் தி.மு.க. வெல்லட்டும், கோவை குலுங்கிட கொள்கைத் தீரர்களே திரண்டிடுக.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



பூந்தமல்லி, பொன்னேரி கிளைச் சிறைகளில் நீதிபதி ஜூலியட் புஷ்பா, கலெக்டர் பிரபுசங்கர் ஆய்வு

திருவள்ளூர், ஜூன் 13– பூந்தமல்லி, பொன்னேரி கிளைச் சிறையினை முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ஜெ. ஜூலியட் புஷ்பா, கலெக்டர் பிரபுசங்கர் கூட்டாய்வு மேற்கொண்டனர்.

திருவள்ளூர்மாவட்டம், பூந்தமல்லி, பொன்னேரி கிளை சிறையினை உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தலின்படி முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ஜெ. ஜூலியட் புஷ்பா தலைமையில் மாவட்ட கலெக்டர் டாக்டர்.த. பிரபு சங்கர், ஆவடி துணை காவல் கண்காணிப்பாளர் ஐமன்ஜமால், செங்குன்றம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு. கி.சு. பாலகிருஷ்ணன், மாவட்ட மோட்டார் வாகன சிறப்பு நீதிபதி சி. சரஸ்வதி, தலைமை குற்றவியல் நடுவர் கே. மோகன், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் பி தீனதயாளன் ஆகியோர் முன்னிலையில் கூட்டாய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் சிறையில் உள்ள கைதிகளுக்கு அளித்து அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை, சுற்றுப்புறங்கள், உணவு தரமான உள்ளதா என்பதை சிறை கைதிகளிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் மருத்துவர்கள் வருகை பதிவேடு, கைதி ஒப்படைப்பு பதிவேடு, காப்பு புத்தகம்(பாரா), சிறை பதிவேடு, ஆயுத அறை, சமையலறை, சட்ட சேவை மையம் , கைதிகளின் நேர்காணல் அறை, போன்றவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் சேதமடைந்த கட்டிடங்களை எடுத்து கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி ஜெ. ஜூலியட் புஷ்பா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொன்னேரி சார் ஆட்சியர் சங்கத் பல்வந்த் வாஹே, உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆயுஷ் குப்தா, துணை கண்காணிப்பாளர்கள், சிறை கண்காணிப்பாளர்கள் கிருஷ்ணராஜ் (பூந்தமல்லி), கோவிந்தராஜ் (பொன்னேரி) வட்டாட்சியர்கள் மதிவாணன் (பொன்னேரி), கோவிந்தராஜன் (பூந்தமல்லி) மற்றும் காவல் துறையினர்கள் உட்பட பலர் உள்ளனர்.

காஷ்மீரில் 21ந் தேதி யோகா தின நிகழ்ச்சி; மோடி பங்கேற்கிறார்

ஸ்ரீநகர், ஜூன்.13

பிரதமர் மோடி வேண்டுகோளை ஏற்று, ஜூன் 21ந் தேதியை சர்வதேச யோகா தினமாக ஐ.நா. சபை அங்கீகரித்தது. 2015ம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 21 ந் தேதி சர்வதேச யோகா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 10வது சர்வதேச யோகா தினம், வருகிற 21ந் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, காஷ்மீரில் நடக்கும் யோகா தின நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். ஸ்ரீநகரில் தால் ஏரிக்கரையில் உள்ள ஷெர் இகாஷ்மீர் சர்வதேச மாநாட்டு மையத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்பார் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. 3வது முறையாக பிரதமராக பதவியேற்ற பிறகு பிரதமர் மோடி முதல்முறையாக காஷ்மீர் செல்கிறார்.

2 பேருக்கு துணை முதலமைச்சர் பதவி

ஒடிசா முதலமைச்சராக மோகன் சரண் மாஜி பதவியேற்பு

பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் நேரில் வாழ்த்து

புவனேஸ்வர், ஜூன்.13

ஒடிசா முதலமைச்சராக மோகன் சரண் மாஜி நேற்று பதவியேற்றார்.

நாடாளுமன்ற தேர்தலுடன் ஒடிசா சட்டசபைக்கும் தேர்தல் நடந்தது. இதில் கடந்த 24 ஆண்டுகளாக ஆட்சியமைத்து இருந்த பிஜூ ஜனதா தளம் கட்சி படுதோல்வியை சந்தித்தது. அதேநேரம் மொத்தமுள்ள 147 சட்டசபை இடங்களில் 78 தொகுதி களில் வெற்றி பெற்ற பா.ஜ.க. மாநிலத்தில் முதல் முறையாக ஆட்சியை பிடித்தது. பின்னர் 3 சுயேச்சைகளும் பா.ஜ.க.வில் இணைந்தனர். இதன் மூலம் மாநில சட்டசபையில் பா.ஜ.க.வின் பலம் 81 ஆக உயர்ந்தது.

சட்டசபை தேர்தலில் சாதனை வெற்றி பெற்றதை தொடர்ந்து, புதிய முதலமைச்சரை தேர்வு செய்ய பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்களின் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், பூபேந்திர யாதவ் முன்னிலையில் நடந்த இந்த கூட்டத்தில் 4 முறை எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டவரும், பழங்குடியினர் தலைவருமான மோகன் சரண் மாஜி புதிய முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து புதிய அரசின் பதவியேற்பு விழா நேற்று நடந்தது.

தலைநகர் புவனேஸ்வரில் உள்ள ஜனதா மைதானத்தில் நடந்த இந்த விழாவில் புதிய முதலமைச்சராக மோகன் சரண் மாஜி பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு கவர்னர் ரகுபர்தாஸ் பதவிப்பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

பின்னர் மாநில மூத்த பா.ஜ.க. தலைவர் கே.வி.சிங் தியோ, புதுமுக எம்.எல்.ஏ. பிராவதி பரிதா ஆகியோர் துணை முதலமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர்.

மேலும் 8 கேபினட் அமைச்சர்கள் மற்றும் 5 தனிப்பொறுப்புடன் கூடிய ராஜாங்க அமைச்சர்களும் பதவியேற்றனர்.

இந்த விழாவில் பிரதமர் மோடி, புதிய பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங், பூபேந்தர் யாதவ், தர்மேந்திர பிரதான், ஜுவல் ஓரம், அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் உத்தரபிரதேசம், கோவா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், அசாம், குஜராத், சத்தீஷ்கார், உத்தரகாண்ட் ஆகிய பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் விழாவில் பங்கேற்றனர்.

இதைப்போல மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் நவீன் பட்நாயக்கும் புதிய முதலமைச்சரை நேரில் வாழ்த்தினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா, விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள கவுதம சிகாமணி ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அருகில் அமைச்சர் பொன்முடி, எம்.பி.க்கள் திருச்சி சிவா, தயாநிதிமாறன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உடன் உள்ளனர்.

டெல்டா படுகையில் போர்க்கால அடிப்படையில் தூர்வாருதல் பணிகளை மேற்கொள்ள வேண்டும்

அலுவலர்களுக்கு அமைச்சர் துரைமுருகன் உத்தரவு

சென்னை, ஜூன் 13– பருவமழைக்கு முன்பாக காவிரி டெல்டா படுகையில் தூர்வாருதல் போன்ற அனைத்து பணிகளையும் போர்க்கால அடிப்படையில் முழுவதுமாக முடிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உத்தரவிட்டார்.

அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தலைமைச் செயலகத்தில் துறையின் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் பேசும்போது, நீர்வளத்துறையின் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறிப்பாக தடுப்பணைகள் மற்றும் அணைக்கட்டுகள் கட்டுமானம் செய்தல், பல்வேறு நீர் ஆதார கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் புனரமைக்கும் பணிகள் மற்றும் பருவ மழைக்கு முன் காவேரி டெல்டா படுகையில் சிறப்பு தூர்வாரும் பணிகள் போன்ற அனைத்து பணிகளும் போர்க்கால அடிப்படையில் முழுவதுமாக செய்து முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

கடந்த 2023 டிசம்பர் 4 அன்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களை தாக்கிய மிக்ஜாம் புயல் காரணமாகவும், தென் மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாதஅதீதகனமழைகாரணமாகவும் நீர்நிலை கட்டுமானங்களில் ஏற்பட்ட சேதங்களை சீரமைக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகளை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தினார்.

மேலும், பருவமழை காலங்களில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும் அணைகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளை தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, திட்ட இயக்குநர் தென்காசி ஜவகர், அரசு கூடுதல் செயலாளர் சு.மலர்விழி, அரசு சிறப்புச் செயலாளர் கா.முருகன், காவேரி தொழில்நுட்ப குழுமத்தின் தலைவர் ஆர்.சுப்ரமணியன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் கு.அசோகன் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025

CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 27.06.2024 அன்று மாலை 3:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	101042516286	நாகேஸ்வரன் கோதண்டபாணி	த/பெ. கோதண்டபாணி	1 260 பி, வண்டலூர், நடேசன் தெரு, வண்டலூர், காஞ்சிபுரம் நடேசன் அரண்மனை அருகில் செங்கல்பட்டு தமிழ்நாடு 600048	08/06/2023	93,239.75
சென்னை	101042519404	தாமோதரன்	த/பெ. கிருஷ்ணன்	29 99 தாந்தோணி அம்மன் கோயில் பிரதான தெரு வில்லிவாக்கம் திருவள்ளூர் சென்னை தமிழ்நாடு 600049	14/12/2023	173,553.28
சென்னை	101042518380	தினேஷ் குமார்	த/பெ. கோபி	5 133 116வது தெரு முத்தமிழ் நகர் கொடுங்கையூர் சென்னை தமிழ்நாடு 600118	16/10/2023	68,902.73
சென்னை	101042518954	வசந்த குமார் யு	த/பெ. உலகநாதன்	உலகநாதன் 74 46 அண்ணா தெரு காமராஜ் நகர் பீர்கங்கரனை காஞ்சிபுரம் செங்கல்பட்டு தமிழ்நாடு 600063	18/11/2023	216,644.26
சென்னை	101042519589	தினேஷ் கே என்	த/பெ. நாகராஜ்	021 4219 அம்பேத்கர் நகர் 2வது தெரு அயனாவரம் அயனாவரம் சென்னை தமிழ்நாடு 600023	26/12/2023	106346.35
சென்னை	101042519627	நரேஷ்குமார் வி	த/பெ. வாசுதேவன்	55 சாணார்பாளையம் எலவம்பேடு வன்னிப்பாக்கம், திருவள்ளூர் தமிழ்நாடு 601203	28/12/2023	79995.30

ஏல தேதி 27.06.2024 அன்று மாலை 3.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டு

C.O.S.No.669 / 2023

M/s.கங்கா பைனான்ஸ் பங்குதாரர் வெ.ராஜகோபால் தமிழ் வளாகம், முதல் தளம், மனை எண்.21 & 22, லட்சுமிபுரம் விரிவாக்கம், முல்லை நகர் சாலை, மேற்கு தாம்பரம், சென்னை–600 045 ...வாதி

எதிர்

திரு. M. ரமேஷ்குமார் த/பெ.T.N.முருகேசன் எண். 31A, முதல் குறுக்கு தெரு,சந்திரன் நகர், திருநீர்மலை, குரோம்பேட்டை, சென்னை–600 044 ...பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வழக்கானது தாங்கள் கடனுறுதிசீட்டு மூலம் பெற்ற கடன் தொகை வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் வரும் 08.08.2024 அன்று காலை 10.30 மணிக்கு நீங்கள் மேற்படி நீதிமன்றத்தில் நேரடியாகவோ, அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி உங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

R. பாஸ்கர்
R. நடராஜன்
வாதி வழக்கறிஞர்கள்

Home First Finance Company India Limited

homefirst – We'll take you home

CIN: L65990MH2010PLC240703
Website: homefirstindia.com
Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு

Ref: **கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002, விதி 8, துணை விதி (1)ன் கீழ் சுவாதீனம் எடுத்த அறிவிப்பு**

கீழே கையொப்பமிட்டுள்ள ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (சட்டம் எண். 54 ஆப் 2002) மற்றும் 13(12)வது பிரிவு மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3ன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, கீழ் கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த தேதியிட்ட டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய பாக்கி தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு உங்களை/கடன்தாரரர்களை கேட்டுக் கொண்டிருந்தார். எனினும் நீங்கள்/கடன்தாரர்கள் அனைவரும் குறிப்பிட்ட பாக்கித் தொகையை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் செலுத்தத் தவறிவிட்டீர்கள். எனவே, சர்பாசி சட்டம் 2002 பிரிவு 13, துணை பிரிவு (4) மற்றும் அதன் கீழுள்ள விதிகளின்கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டது.

வ. எண்	கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள் பெயர்	அடமான சொத்து விவரம்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	டிமாண்ட் நோட்டீஸ் தேதியன்று மொத்த பாக்கித் தொகை (ரூ.)	சுவாதீன தேதி
1.	கோதண்டராமன் சுப்பிரமணி, பவித்ரா முருகன்	மனை எண்.33 பிளாக் எண்.16ஏ, விஜயலட்சுமி நகர், சர்வே எண்.702/3, வார்டு E, பிளாக் எண்.16ஏ, புதிய டி.எஸ்.எண்.17/57, கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு 600 053	04.04.2024	6,77,140	10.06.2024
2	சுகந்தன் எஸ், ஜெகதீஸ்வரி எஸ்	சர்வே எண்.54, மனை எண்.8பி, விஜய நகர், பொழிச்சலூர் கிராமம், ஆலந்தூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு 600 074	04.04.2024	21,88,782	10.06.2024
3	செந்தில் முருகன் ஆர், சத்யா எஸ்	மனை எண்.416, வடக்கு போர்ஷன், ஐடியல் ஹோம் காலனி, பழைய சர்வே எண்.271/1ஏ1பி, ச.எண்.271/56, DTCP அங்கீகார எண்.981/91, கூடபாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு 600 124	04.04.2024	10,90,132	10.06.2024

கடன்தாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்/உத்தரவாததாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4)ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்துக்கள்/ஈடு பெற்ற சொத்துக்கள் ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் செலுத்த வேண்டிய தொகை, முழுமையாக செலுத்தும் காலம் வரையிலான வட்டிக்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்துக்கள்/ஈடு பெற்ற சொத்துக்கள் மற்றும் அதன் ஏதாவது ஒரு பகுதி தொடர்பாக எந்தவித வர்த்தகத்தையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு (8)–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரருக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

இடம்: சென்னை **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
தேதி: 13.06.2024 **ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்**